வெளியானது 'ஜனநாயகன்': வெறிச்சோடியது தலைமைச் செயலகம்

சென்னை தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை வெறிச்சோடி காணப்பட்ட அமைச்சர்களின் அலுவலகங்கள்.

சென்னை, ஜூலை 23: முதல்வர் ச.ஜோசப் விஜய் நடித்த 'ஜனநாயகன்' திரைப்படத்தைக் காண பெரும்பாலான அமைச்சர்கள் தங்களின் சொந்த தொகுதிக்குச் சென்றதாலும், அமைச்சர்களைக் காண தவெகவினர், பொதுமக்கள் வருகை தராததாலும் தலைமைச் செயலகம் வியாழக்கிழமை வெறிச்சோடி காணப்பட்டது.

தவெக அரசு பொறுப்பேற்றது முதல் அக்கட்சியினர், பொதுமக்கள் வருகையால் தலைமைச் செயலகம் நிரம்பி வழிந்து வந்தது. இந்நிலையில், பல தடைகளைக் கடந்து வெளியான 'ஜனநாயகன்' திரைப்படத்தை சென்னை அடையாறு திரைப்படக் கல்லூரியில் முதல்வர் விஜய் புதன்கிழமை கண்டு ரசித்தார். அவர் தலைமைச் செயலகத்துக்கு வியாழக்கிழமை வரவில்லை. மேலும் 'ஜனநாயகன்' திரைப்படத்தைக் காண பெரும்பாலான அமைச்சர்கள் தங்களின் சொந்த தொகுதிக்குச் சென்றதால் அமைச்சர்களைக் காண வரும் மக்கள், தவெகவினர் வருகை தராததாலும் தலைமைச் செயலகம் வியாழக்கிழமை வெறிச்சோடி காணப்பட்டது.

ஜனநாயகனை கண்டு ரசித்த பேரவைத் தலைவர்: இதனிடையே, சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகர் சென்னை ராயப்பேட்டையில் உள்ள திரையரங்கில் 'ஜனநாயகன்' திரைப்படத்தை வியாழக்கிழமை கண்டு ரசித்தார். பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், 'எம்ஜிஆர் நடித்த 'உலகம் சுற்றும் வாலிபன்' திரைப்படம் பல தடைகளைக் கடந்து வெளியானபோது, அந்தப் படத்தை முதல் நாள், முதல் காட்சியில் பார்த்தேன். அப்போது, என்ன மகிழ்ச்சி கிடைத்ததோ அதேபோன்ற ஓர் உணர்வும் மகிழ்ச்சியும் 'ஜனநாயகன்' படத்தைப் பார்த்தபோது கிடைத்தது என்றார்.

தூத்துக்குடியில் போலீஸ் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் உயிரிழப்பு

அருணாச்சலம்

தூத்துக்குடி, ஜூலை 23: தூத்துக்குடியில் காவல் துறையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர், அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு வியாழக்கிழமை உயிரிழந்தார். இந்த நிலையில், போலீஸார் தாக்கியதில் அவர் உயிரிழந்ததாகக் கூறி, அவரது உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

தூத்துக்குடி, அமுதா நகரைச் சேர்ந்த நாகராஜ் மகன் அருணாச்சலம் (24). தூத்துக்குடி 3-ஆவது மைல் பகுதியில் உள்ள அரசு மதுக் கடையுடன் கூடிய மதுக்கூடத்தில் வேலை செய்து வந்தார். இவர் சட்டவிரோதமாகமது விற்றதாகக் கூறி, தென்பாகம் காவல் நிலைய போலீஸார் கடந்த 17-ஆம் தேதி கைது செய்து, 120 மதுபாட்டில்களை பறிமுதல் செய்தனர். அன்றைய தினமே அவரை மருத்துவப் பரிசோதனை முடித்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி சிறையில் அடைப்பதற்கான நடவடிக்கையில் போலீஸார் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் அருணாச்சலம் காவல் நிலையத்தில் இருந்தபோது வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டு கீழே விழுந்ததாகவும், அவருக்கு தலை, காலில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் போலீஸார் அவரது குடும்பத்தினருக்குதகவல் தெரிவித்தனர். இதையடுத்து அருணாசலத்தை அவரது தாய் பரமேஸ்வரி தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அருணாச்சலம் வியாழக்கிழமை உயிரிழந்தார்.

இதனால், அதிர்ச்சியடைந்த அவரது குடும்பத்தினர் தென்பாகம் காவல் நிலையத்தில் நான்கு போலீஸார் சேர்ந்து அருணாச்சலத்தை கடுமையாக தாக்கியதில் அவர் உயிரிழந்ததாகக் கூறி உடலை வாங்க மறுத்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்ததும் போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு முன்னாள் அமைச்சர் பி.கீதா ஜீவன் உள்பட பல்வேறு தரப்பினர் வந்து இளைஞரின் உயிரிழப்புக்கு நீதி கோரி போராட்டத்தில் பங்கேற்றனர். போராட்டத்தில்ஈடுபட்டவர்களுடன்போலீஸார் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இச்சம்பவம் தொடர்பாக அருணாச்சலத்தின் உறவினர்கள் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளரை சந்தித்து புகார் மனு அளித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அருணாச்சலத்தின் உறவினர்களிடம் நீதித்துறை நடுவர் விஜயராஜ் விசாரணை நடத்தினார். அதைத் தொடர்ந்து, அவரது உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

உதயநிதி ஸ்டாலின் கண்டனம்

சென்னை, ஜூலை 23: தூத்துக்குடியில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் உயிரிழந்த சம்பவத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் 'எக்ஸ்' தளத்தில் வியாழக்கிழமை வெளியிட்ட பதிவு: தூத்துக்குடியில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அருணாசலம் என்ற இளைஞர், காவலர்களின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தது வேதனை அளிக்கிறது. காவலர்கள் தனக்கு இழைத்த அநீதியை தனது இறுதி நிமிஷங்களில் அருணாசலமே விடியோவில் எடுத்துச் சொன்னதைப் பார்க்கும்போது, நெஞ்சம் கலங்குகிறது. காவல் மரணங்களின்போது துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதல்வர் ஜோசப் விஜய் கடும் நடவடிக்கைகளை எடுக்காமல் மௌனம் காப்பதால், இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

மகனை இழந்து தவிக்கும் அருணாசலத்தின் குடும்பத்துக்கு, திரைப்படத்தைப் பார்த்துக் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும் இந்த ஆட்சியாளர்கள் என்ன பதில் சொல்லப்போகிறார்கள்?

பெ.சண்முகம் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்): அண்மையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் சபரி வர்மன் என்ற மாற்றுத்திறனாளி இளைஞர் காவல் துறையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சித்தரவதை செய்யப்பட்டு இறந்த நிலையில், தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் போலீஸ் காவலில் அருணாசலம் உயிரிழந்துள்ளது கடும் கண்டனத்துக்குரியது. இந்த சம்பவம் குறித்து சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்.

பிரேமலதா விஜயகாந்த் (தேமுதிக): விசாரணை கைதி உயிரிழந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். உயிரிழந்த இளைஞரின் குடும்பத்துக்கு உரிய நிவாரணம், குடும்பத்தில் ஒருவருக்கு அரசுப் பணி வழங்க வேண்டும்.

இளைஞர் உயிரிழப்பு: காவல் துறை விளக்கம்

விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் உயிரிழந்தது தொடர்பாக மாவட்ட காவல் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடந்த 17-ஆம் தேதி கைது செய்யப்பட்ட அருணாச்சலம் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர், அவர் திடகாத்திரமாக இருப்பதாகவும், அவரது உடலில் எந்தவித வெளிப்புற காயங்களும் இல்லை என்றும் சான்றளித்தார்.

அதன்பின்னர் அவர், மீண்டும் காவல் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டு, பிற கைதிகளுடன் காவல் நிலைய லாக்-அப்பில் வைக்கப்பட்டார். லாக்-அப்பில் இருந்தபோது, மற்ற கைதிகளுடன் அவர் இயல்பாக நின்று பேசிக் கொண்டிருந்தபோது திடீரென தானாகவே மயங்கி கீழே விழுந்தார். இதையடுத்து அவருக்கு குடிநீர் வழங்கப்பட்டது. அப்போது காவல் நிலைய வரவேற்பு பகுதியிலிருந்த அவரது தாயாரும் உடனடியாக அழைக்கப்பட்டார்.

அவர் கீழே விழும் காட்சி லாக்-அப்பிற்கு முன்புறத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ளது.

பின்னர், தொடர் மருத்துவ பரிசோதனைக்காக உறவினர்களுடன் அருணாச்சலம் அனுப்பி வைக்கப்பட்டார். மருத்துவமனை அருகே அவர் சென்றபோது மீண்டும் மயங்கி விழுந்ததால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இருப்பினும், அவர் வியாழக்கிழமை உயிரிழந்ததாக மருத்துவர்கள் அறிவித்தனர். இச்சம்பவம் தொடர்பாக அவரது தந்தை அளித்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடைபெற்று வருகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலியல் தொல்லை: என்ஐடி பேராசிரியர் கைது

திருச்சி, ஜூலை 23: திருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகத்தில் (என்ஐடி) பெண் உதவி பேராசிரியைக்கு மின்னஞ்சல் மூலம் பாலியல் தொல்லை கொடுத்த பேராசிரியரை போலீஸார் வியாழக்கிழமை கைது செய்தனர்.

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் மேற்கு காட்டுரைச் சேர்ந்தவர் ஜெ. ஜெரால்டு (51). இவர், திருச்சி துவாக்குடியில் உள்ள தேசிய தொழில்நுட்பக் கழகத்தில் உற்பத்தி பொறியியல் (புரொடக்ஷன் என்ஜினீயரிங்) துறையில் பேராசிரியராகப் பணிபுரிகிறார்.

இவர், அதே கல்லூரியில் உதவிப் பேராசிரியையாகப் பணியாற்றி வரும் ஒருவருக்கு கடந்த ஓராண்டுக்கு முன்பு மின்னஞ்சல் மூலமாக பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதுகுறித்து உதவிப் பேராசிரியை கல்லூரி நிர்வாகத்திடம் அளித்த புகாரின்பேரில், கல்லூரியில் செயல்படும் உள்ளக புகார் குழு விசாரணை நடத்தி வந்தது.

இதனிடையே, அந்த உதவிப் பேராசிரியை குறித்து சக பேராசிரியர்கள், மாணவர்களுக்கு வாட்ஸ்ஆப், மின்னஞ்சல் மூலம் ஜெரால்டு தவறான தகவல்களை பரப்பியுள்ளார். மேலும், உதவிப் பேராசிரியை மீது பாலியல் ரீதியான குற்றச்சாட்டுகளையும் சுமத்தியுள்ளார். அவரின் கணவருக்கும் மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ்ஆப் மூலம் தவறான தகவல்களை பரப்பி வந்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து உதவிப் பேராசிரியை திருச்சி மாவட்ட சைபர் குற்றப் பிரிவில் ஜூலை 18-ஆம் தேதி புகார் அளித்தார். இதன்பேரில், போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில், பெண் உதவிப் பேராசிரியைக்கு பாலியல் தொல்லை கொடுத்த பேராசிரியர் ஜெரால்டை திருச்சி மாவட்ட சைபர் குற்றப் பிரிவு போலீஸார் வியாழக்கிழமை கைது செய்தனர். தொடர்ந்து அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஜூலை 27-இல் விசிக ஆர்ப்பாட்டம்: தொல். திருமாவளவன் அறிவிப்பு

சென்னை, ஜூலை 23: தில்லியில் மாணவர்கள், இளைஞர்கள் மீது காவல் துறை நடத்திய தாக்குதலைக் கண்டித்தும், மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தியும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் ஜூலை 27-இல் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அந்தக் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

மத்திய கல்வி அமைச்சராக தர்மேந்திர பிரதான் பொறுப்பேற்ற பிறகு நீட் தேர்வு உள்ளிட்ட பல்வேறு நுழைவுத் தேர்வுகள் மற்றும் தகுதித் தேர்வுகளுக்கான வினாத் தாள்கள் பல முறை கசிந்து தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டு, சுமார் ஏழரை கோடி மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சில மாணவர்கள் தற்கொலை செய்துள்ளனர்.

கல்வித் துறையைச் சீரழிக்கும் அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்று மாணவர்கள் தன்னெழுச்சியாகக் கிளர்ந்தெழுந்து போராடி வருகின்றனர். கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் நடத்திய பேரணியைத் தடுக்க வரலாறு காணாத அளவில் தில்லியின் வீதி தோறும் காவல் துறையினர் குவிக்கப்பட்டனர். பேரணியில் பங்கேற்ற மாணவர்களையும் இளைஞர்களையும் தாக்கியுள்ளனர். இதில் ஏராளமான மாணவர்கள் பலத்த காயம் அடைந்துள்ளனர்.

இதைக்கண்டித்துவிடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வரும் ஜூலை 27-ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தெரிவித்துள்ளார் தொல்.திருமாவளவன்.

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் திருமதி. குறிஞ்சி க/பெ. F.ரமேஷ் பாபு, கதவு எண்.65, பாலாஜி நகர், காங்கேயன் கேஸ் ரோடு அருகில், தோட்டபாளையம், வேலூர் மாவட்டம் – 632004 ஆகிய இவருடைய தாயார் திருமதி. J.மேரி ஞானமணி ஜேசுதாஸ் அவர்கள் 13-02-2025 அன்று இராணிப்பேட்டையில் காலமானார். எனது கட்சிகாரரின் தாயார் பெயர் அவருடைய சொத்து பத்திரங்களில் J.மேரி ஞானமணி ஜேசுதாஸ் என்று பதிவாகியுள்ளது. மேலும் அவருடைய ஆதார் அட்டை மற்றும் இறப்பு சான்றிதழில் மேரி ஜேசுதாஸ் என்று பதிவாகியுள்ளது. மேற்படி இரண்டு பேரும் ஒரே நபர் தான் என்பதை இதன் மூலம் தெரிவித்துள்ளார். எனது கட்சிகாரரின் தாயார் பெயரில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் எனக்கு தகவல் தெரிவிக் கேட்டுக்கொள்கிறேன்.

M.RAMAMOORTHI, B.Com., B.L.,
ADVOCATE & NOTARY PUBLIC
No.2/46, South Saidapet Steet,
Ammoor - 632501.
Cell No: 9487231971

தங்கம் பவுனுக்கு ரூ.560 உயர்வு

சென்னை, ஜூலை 23: ஆபரணத் தங்கத்தின் விலை வியாழக்கிழமை பவுனுக்கு ரூ.560 உயர்ந்து ரூ.1,08,000-க்கு விற்பனையானது.

சென்னையில் தங்கம் விலை கடந்த சில நாள்களாக தொடர்ந்து உயர்ந்த வண்ணம் உள்ளது. கடந்த 5 நாள்களில் தங்கம் விலை பவுனுக்கு ரூ.2,640 உயர்ந்து புதன்கிழமை ரூ.1,07,440-க்கு விற்பனையானது. வியாழக்கிழமை விலை மீண்டும் உயர்ந்தது. அதன்படி, கிராமுக்கு ரூ.70 உயர்ந்து ரூ.13,500-க்கும், பவுனுக்கு ரூ.560 உயர்ந்து ரூ.1,08,000-க்கும் விற்பனையானது. வெள்ளி விலை மாற்றமின்றி கிராம் ரூ.245-க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.2.45 லட்சத்துக்கும் விற்பனையானது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கழகம்
கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம்
எண்.571, 4வது தளம், அண்ணா சாலை, நந்தனம், சென்னை-35

ந.க.எண்.303/51/2025 இ-ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்வழி ஏல அறிவிப்பு நாள்: 22.07.2026

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநரால் ஈரோடு மாவட்டத்திலுள்ள பவானிசாகர் நீர்த்தேக்க மீன்பிடிப்பு உரிமத்தை ஐந்து ஆண்டுகளுக்கு குத்தகை மற்றும் உரிமம் அடிப்படையில் தனியாருக்கு வழங்கிட இணையதளவழி இ-ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. நீர்த்தேக்க மீன்பிடி உரிமம் குத்தகை தொடர்பாக பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் நிபந்தனைகளை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/2360/ஒப்பந்தப்புள்ளி/2026 ஒம்/- மேலாண்மை இயக்குநர்

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
பெருநிறுவன அலுவலகம்: "சோழா கிரஸ்ட்", C54 & 55, சூப்பர் B-4, திரு.வி.க. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600 032. கிளை அலுவலகம் :1வது தளம், எண். 872, TNHB சாலை, மா.பொ.சி. நகர், காக்களூர், தமிழ்நாடு 602001

2002 ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், பிரிவு 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர் / அடமானதாரர்களான தங்களுக்கு தெரிவிப்பது யாதெனில் 2002 ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் பிரிவு 13 (2)ன் கீழ் இந்த அறிவிப்பு ஏற்பு அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் தங்களுக்கு அளிக்கப்பட்டு அது பட்டுவாடா ஆகாமல் திரும்பப்பெறப்பட்டுள்ளதையடுத்து கம்பெனியானது தங்களுக்கு எதிரான செயல்முறைகளை தொடங்கியுள்ளது. எனவே, தாங்கள் இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தங்களின் கடன் கணக்குக்கு எதிராக உள்ள கடன் நிலுவை தொகையை வட்டியுடன் சேர்த்து செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில் கம்பெனியானது அதன் கடன்களை வட்டி மற்றும் செலவுகளுடன் சேர்த்து பெறுவதற்காக மேற்படி சட்டம் பிரிவு 13 உபபிரிவு (4)-ன் கீழ் கீழே குறிப்பிட்டுள்ள ஈட்டுறுதி சொத்தினை கையகப்படுத்துவதற்கு தங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அறிவிப்பு கம்பெனிக்கு கிடைக்க கூடிய வேறு எந்த தீர்வுக்கும் எந்த பாரபட்சமும் இல்லாமல் தங்களுக்கு அளிக்கப்படுகிறது என்பதை குறிப்பிட தேவையில்லை.

1. **கடன் கணக்கு எண்.** HE01THV00000083106; **கடன்தாரர்/கள் மற்றும் இணை கடன்தாரர்/களின் பெயர் மற்றும் முகவரி:** 1. பாஸ்கரன் ஓ.ஜி. (விண்ணப்பதாரர்), 2. பி. ஜெயஸ்ரீ (இணை விண்ணப்பதாரர்), 3. ப்ரித்வி (இணை விண்ணப்பதாரர்), அனைவரும் வசிக்கும் முகவரி: எண். 76, கொல்லாபுரியம்மன் கோவில் தெரு, மேல்பாக்கம், கும்பினிபேட்டை, அரக்கோணம், ராணிப்பேட்டை – 631 003, 4. M/s. சற்குரு செட்டியார் மெஸ் (அதன் உரிமையாளர் பாஸ்கரனால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது) (இணை விண்ணப்பதாரர்), எண். 1822, அரக்கோணம் முதல் சோளிங்கர் மெயின் ரோடு, கும்பினிபேட்டை, அரக்கோணம், ராணிப்பேட்டை – 631 003, 5. பி. ஜெயஸ்ரீ (இணை விண்ணப்பதாரர்), எண். 30/6, ரத்தினம் தெரு, காந்தி நகர், அரக்கோணம் நகரம் மற்றும் தாலுகா மற்றும் ராணிப்பேட்டை மாவட்டம் – 631 003.; **கடன் தொகை:** ரூ.70,00,000/-; **கேட்பு அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத் தொகை:** 11/07/2026 மற்றும் 11/07/2026 அன்றைய நிலவரப்படி ரூ.70,01,442/- மற்றும் அதற்கான வட்டி. **சொத்தின் விவரம்: திருமதி. பி. ஜெயஸ்ரீ @ சரிதா (இணை விண்ணப்பதாரர்) என்பவருக்கு சொந்தமான சொத்து:-** ராணிப்பேட்டை பதிவு மாவட்டம், அரக்கோணம் சார்பதிவாளர் எல்லைக்குட்பட்ட, ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தாலுகா, கும்பினிபேட்டை கிராமம், எண்.96 மேல்பாக்கம் மதுரா, கொல்லாபுரியம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள 4791 ¾ சதுர அடி பரப்பளவிலான நிலம் மற்றும் கட்டிடம். இது கிராமநத்தம் பழைய சர்வே எண்.25/6 பகுதி, பட்டா எண்.396-ன் படி கிராமநத்தம் உட்பிரிவு புதிய சர்வே எண்.173/20-ல் அடங்கியுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கில் – சர்வே எண்.173/22, தெற்கில் – கிழக்கு மேற்கான தெரு, கிழக்கில் – சர்வே எண்.173/21, மேற்கில் – சர்வே எண்கள்.173/19 மற்றும் 173/37. அளவீடுகள்: வடபுறத்தில் கிழக்கு மேற்காக – 25 அடி, தென்புறத்தில் கிழக்கு மேற்காக – 17½ அடி, கிழக்குப் புறத்தில் வடக்கு தெற்காக – 220 அடி, மேற்குப் புறத்தில் வடக்கு தெற்காக – 231 அடி. ஆக மொத்தம் 4791 ¾ சதுர அடி.

தேதி : 24-07-2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : திருவள்ளூர் சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

கனரா வங்கி Canara Bank
சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I
எண். 524, 8வது தளம், கனரா டவர்ஸ், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. போன்: 2849 6339/6900
e-mail id cb2361@canarabank.com, Website: www.canarabank.com

மின் ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களை மறுசீரமைத்தல் சட்டம் 2002 மற்றும் பிணைகாப்பு நிதி சொத்துக்கள் அமலாக்க சட்டம் 2002-ன் கீழ் உள்ள விதி எண். 8 (6)-ன் பிரிவு நிபந்தனைகளின் படி அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடு செய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை **செயின்ட் மெரீஸ் சாலை கிளை-ன்** அதிகாரபூர்வ அதிகாரியால் **அடையாளப்பூர்வ சுவாதீனம்** செய்யப்பட்ட சொத்துக்களை **சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I,** சென்னை-க்கு மாற்றப்பட்டதிலிருந்து கனரா வங்கி சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I க்கு செலுத்த வேண்டிய **21.07.2026** அன்று வரை **ரூ.15,41,02,092.83 (ரூபாய் பதினைந்து கோடியே நாற்பத்து ஒரு லட்சத்து இரண்டாயிரத்து தொண்ணூற்று இரண்டு மற்றும் பைசா எண்பத்து மூன்று மட்டும்)** மேலும் அதற்குண்டான வட்டி மற்றும் வங்கியால் ஏற்படக்கூடிய இடைநிகழ் செலவுகள் பிறக்கட்டணங்கள் சேர்த்து **1. M/s. EON இன்டர்நேஷனல்** பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் **திரு.B.சையத் சாதிக் பாஷா, திருமதி.B.ரியானா & திருமதி.K.அஜீஸுன்னிஷா** எண்.11/6, 1வது தளம், லாலா குட்டி தெரு, பெரியமேடு, சென்னை - 600 003. **மேலும்: தொழிற்சாலை முகவரி:** எண்.703/3, MBT சாலை, VC மோட்டூர், ராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம் - 632 513. **திரு. B. சையத் சாதிக் பாஷா,** த/பெ. திரு..பாபுலால், **திருமதி.B. ரியானா** த/பெ.திரு..பாபுலால், **திருமதி. K.அஜீஸுன்னிஷா** க/பெ. (லேட்) சையத் கலீம் மற்றும் **திருமதி.தாஜுன்னிசா** க/பெ. திரு..பாபுலால், **அனைவரின் முகவரி :** பழைய எண்.4/56A, புதிய எண்.15, அணைக்கட்சாலைத் தெரு, ஒடந்தாங்கல் கிராமம், பூண்டி அஞ்சல், வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டம்-632 513, அவர்களிடமிருந்து வருவிக்கும் பொருட்டு அசையா சொத்துக்களை **"உள்ளது உள்ளபடி" "உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **13.08.2026** அன்று (காலை 10.30 மணி முதல் 11.30 வரை) (ஒவ்வொரு 5 நிமிடத்திற்கும் விற்பனை முடியும் வரை கால அளவு நீட்டிக்கப்படும்.) விற்பனை செய்யப்பட உள்ளது என்று இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது.

அசையா சொத்துக்களின் விவரங்கள் : பத்திர எண் .7492/2015-ன் படி **திருமதி.B.தாஜுன்னிசா அவர்கள் பெயரில் உள்ள சொத்து. வகை எண். 1:** அரக்கோணம் பதிவு மாவட்டம், வாலாஜா துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட வேலூர் மாவட்டம், வாலாஜா தாலுகா, பூண்டி கிராமம், சர்வே எண். 263/1, புதிய சர்வே எண்.263/1A-ன் படி **3580 சதுர அடி நிலம் மற்றும் அங்குள்ள 1200 சதுர அடி** கார்ப்பெட் ஏரியா கொண்ட குடியிருப்பு கட்டிடம், மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும், எல்லைகள்: வடக்கில்: அப்துல் அதீஸ் சாகிப் ரஷீத் சாகிப், தெற்கில்: அசரத்துல்லா சாகிப் அவர்களின் நிலம், கிழக்கில்: பாட்டை, மேற்கில்: நரசிம்மன் கொல்லை. மொத்தம்: **3580 சதுர அடி. வகை எண். 2:** அரக்கோணம் பதிவு மாவட்டம், வாலாஜா துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட வேலூர் மாவட்டம், வாலாஜா தாலுகா, பூண்டி கிராமம், சர்வே எண். 263/1, புதிய சர்வே எண்.263/1A-ன் படி **26160 சதுர அடி** பரப்பளவு காலி மனை மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். மேற் குறிப்பிட்டுள்ள வகை எண். 1 மற்றும் 2-ன் சொத்துக்கள் திருமதி.தாஜுன்னிசா - அவர்கள் பெயரில் உள்ளது.

குறைந்த பட்ச விலை : ரூ.31,20,000/- | டேணிஃப்தொகை : ரூ.3,12,000/- | ஏல உயர்வு தொகை : ரூ.50,000/-

மின் ஏல தேதி / நேரம் : 13.08.2026
அன்று காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை
ஒவ்வொரு 5 நிமிடத்திற்கும் விற்பனை முடியும் வரை கால அளவு நீட்டிக்கப்படும்.

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் :
11.08.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

டேணி தொகை செலுத்த கடைசி தேதி : குறைந்த பட்ச விலையில் 10% டேணி தொகையை M/s.PSB அலையன்ஸ் பிரைவேட் லிமிடெட்-ன் E-wallet (BAANKNET) என்ற போர்டலில் நேரடியாகவோ அல்லது டேணி தொகையை Challan எடுத்து RTGS / NEFT முலமாக Challan-ல் குறிப்பிட்டுள்ள கணக்கு விவரத்தில் 12.08.2026 அன்று அல்லது அதற்கு முன்பு மாலை 5.00 மணிக்குள் செலுத்த வேண்டும்.

மின் ஏலம் பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் வலைதளத்தில் (www.canarabank.com) "E-Auction" இணைப்பில் தெரிந்து கொள்ளலாம் அல்லது கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை I, சென்னை (தொலைபேசி எண்.044-2849 6339 / 2849 6900), cb2361@canarabank.com என்ற மின் அஞ்சலில் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும் அல்லது ஏல சேவை வழங்குநரின் விவரங்கள்: Baanknet (M/s PSB Alliance Pvt. Ltd), (Contact No. 7046612345 / 6354910172/ 8291220220/ 9892219848 / 8160205051, மின்னஞ்சல்: support.baanknet@psballiance.com/ support.baanknet@procure247.com).
மின் ஏல போர்டல்: https://baanknet.com

இந்த சொத்து வங்கியின் அடையாளப்பூர்வ சுவாதீனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது மற்றும் ஏல கொள்முதல்தாரர் நிலையான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடுதலாக பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்.
1. சொத்து அடையாளப்பூர்வ சுவாதீனத்தில் உள்ளது மற்றும் ஏ ல கொள்முதல்தாரர் தனது சொந்த முயற்சியிலேயே மற்றும் பொறுப்பில் சொத்தை கொள்முதல் செய்ய வேண்டும். 2. அரசு சுவாதீனத்தை ஒப்படைப்பதற்கு வங்கி பொறுப்பேற்காது. 3. வெற்றி பெ